2004 ஜூலை 26]

மேலும், புதிதாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டால் தகுதி அடிப்படையில் சங்கம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த ஆண்டே உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 18, திரு. ப. அரசன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.*

18—

பாலியெஸ்டர் நூற்பாலை

***38690—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அறந்தாங்கியில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறையில் தேனி, எட்டையபுரம் போன்ற மில்களில் பாலியஸ்டர் நூல் தயாரிக்கிற வகையில் இப்போது இரண்டு நூற்பாலைகளை மாற்றியிருக்கிறார்கள். அப்படி மாற்றுகிறபோது அந்த நூற்பாலைகள் இலாபத்திலே இயங்குகிற ஒரு சூழ்நிலை உருவாகிறது. அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது. அந்த வகையில் அறந்தாங்கியிலே இயங்குகிற கூட்டுறவு நூற்பாலை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கியிலே இயங்கிவரும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 10,560 கதிர்களுடன் தனது உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆலையில்* 22 S Hank, 34 S Cone, 40 S Hank, 40 S Cone, 60 S Hank, 60 S Cone *போன்ற பருத்தி நூல்கள் இங்கே தயாரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு காரணங்களினால் ஆலை நட்டத்திலே இயங்குவதுடன் நிதிநிலையும் மோசமடைந்துள்ளது. இந்தக் கூட்டுறவு நூற்பாலையை பாலியெஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலையாக மாற்றும் கருத்துரு அரசிடம் பரிசீலனையில் இல்லை. மேலும், ஆலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாலும், ஆலையில் குவிந்த நட்டம் 31-5-2003 வரை சுமார் 2411 இலட்சம் என்பதாலும் ஆலையை மேலும் விரிவுபடுத்தும் திட்டமோ, மாற்றியமைக்கும் திட்டமோ ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 19, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

19—

மணிக் கூண்டைச் சீரமைத்தல்

***20583—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு நகர பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள மணிக் கூண்டைச் சீரமைத்துக் கடிகாரத்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்செங்கோடு நகராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால், திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள மணிக்கூண்டைச் சீரமைத்துக் கடிகாரத்தை இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.